மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சம்பவம் குறித்து தகவல் சொன்ருல், அதற்குரிய விவரங்கள் திரட்டித் தரப்படும்.

DR. H. V. HANDE : While replying to my previous question the Hon. Chief Minister did not tell us whether recruitment to these colleges has been stopped and whether there is any change in the policy of recruitment and whether the Government propose to reduce the constabulary force. Will the Hon. Chief Minister take us into confidence and tell us the real position in regard to this matter?

THE HON. THIRU C. N. ANNADURAI : I may tell the hon. Member that there is no change in policy. Recruitment is qualified by the need for men in the police forces.

THIRU K. VINAYAKAM : Reverting to the answer to the main question, may I know from the Hon. Chief Minister on what basis certain posts which are reported to have been abolished now, were originally created? Do this Government feel that those posts are not necessary now? What were the works assigned to them previously, what were the functions which they were discharging previously? Is it a fact that the Government consider that it is not necessary to keep them in those posts now? Will the Hon. Chief Minister state the reasons categorically?

THE HON. THIRU C. N. ANNADURAI : It is quite obvious by the abolition of these posts that this Government feel that they are not necessary.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : நீக்கப்பட்டவர்களில் எத்தனை பேர்கள் அரிசனங்கள் என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : நீக்கப்பட்டவர்கள் என்று இதிலே தலைப்பு இருக்கிறதே தவிர, வேலையிலிருந்து அகற்றப்பட்டார்கள் என்று பொருள் அல்ல. இதிலே ஆதித்திராவிடர்கள் எத்தனை பேர்கள் என்ற தகவல் என்னிடம் இல்லை.

Copies of Central Budget

*2 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether copies of the Central Budget were burnt by political parties at various places in Madras City, in April 1968?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : 3—4—1968-ம் நாளன்று இந்திய பொதுவுடைமைக் கட்சியின் (வலதுசாரி) தமிழ்நாட்டுப் பிரிவைச் சேர்ந்த உறுப்பினர்கள் சென்னை மாநகரின் பல்வேறு முக்கியமான பகுதிகளில் மத்திய அரசின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளைத் தீ இட்டுக் கொளுத்தினர்.

1968 ஆகஸ்ட் 16]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட அந்தக் கிளர்ச்சிக்கு மாநில அரசும் உடந்தையா? இல்லையென்றால், ஏன் அந்த பட்ஜெட் நகல்களைக் கொளுத்தியவர்கள் மீது வழக்குப் போடப்படவில்லை?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்திய அரசின் பட்ஜெட் ஏடுகளைக் கொளுத்துவது ஒரு குற்றம் என்று கருதப்பட்டு வழக்குப் போட வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு, அமளியற்ற முறையில் நடந்ததால், எந்த வழக்கும் போடப்பட வில்லை. "மத்திய அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட அந்தக் கிளர்ச்சியில் மாநில அரசும் உடந்தையா?" என்ற வார்த்தையைக் கனம் உறுப்பினரவர்கள் உபயோகப்படுத்தியதற்காக நான் வருந்துகிறேன். இது மத்திய அரசுக்கு எதிராகச் செய்யப்படுகிற காரியம் அல்ல. மத்திய அரசினுடைய வரவு செலவுத் திட்ட அறிக்கையில் பாதிக்கப்படக்கூடிய பகுதிகள் என்று சிலவற்றை வலது சாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியினர் கருதிய காரணத்தால், அதிலே தங்களுக்குள்ள அதிருப்தியைத் தெரிவிப்பதற்காக, அந்த ஏட்டை அவர்கள் கொளுத்தினார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்தப் போராட்டத்திலே, வலது சாரி மாத்திரமல்ல, எல்லா சாரியினரும் ஆளுங்கட்சியினர் உட்பட காங்கிரஸ் கட்சியிலேயும் முற்போக்கு எண்ணம் படைத்த காங்கிரஸ்காரர்கள் உள்பட்டு கலந்துகொண்டிருக்கிறார்கள் என்பது கனம் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? (காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சிலர் எழுந்தார்கள்) ஆகவே, நேரடியான போராட்டம் என்பதைக் கனம் முதலமைச்சர் அவர்கள் . . .

THIRU K. VINAYAKAM : This is an unwarranted insinuation. You must pull up the Member. There is no use in allowing him to drift off.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைக் காங்கிரஸ் உறுப்பினர்கள் மறுக்கிறார்கள், அவர்கள் அதில் கலந்துகொள்ளவில்லை என்பதைக் குறிப்பிடுகிற மாதிரி.

திரு. வி. கே. கோதண்டராமன் : 'காங்கிரஸ்காரர்கள்' என்று சொல்லவில்லை. அதிலே ஒரு சில நல்ல எண்ணம் படைத்தவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்லுகிற நேரத்தில், மாற்றுக் கட்சிகளைத் தொடர்புபடுத்தாமல் கேள்வி கேட்க வேண்டும். அந்தப் போராட்டத்தில் மற்றக் கட்சியினரும் கலந்து கொண்டார்கள் என்ற வார்த்தைகளைக் கனம் உறுப்பினர் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளுவது நலம் என்று கருதுகிறேன்.

(சிறிது நேரத்திற்குப் பிறகு)

[1968 ஆகஸ்ட் 16

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாற்றுக் கட்சித் தோழர்களும் அதிலே கலந்துகொண்டார்கள், காங்கிரஸ்காரர்களும் கலந்துகொண்டார்கள் என்ற முறையில் குறிப்பிட்ட வார்த்தைகளைத் திரும்பப் பெற கனம் உறுப்பினர் அவர்கள் மறுக்கிறார்களா ?

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், வடார்க்காடு மாவட்டத்தில், காங்கிரஸ் கட்சியில் இருந்து, பிறகு அந்தக் கட்சியின் பேரில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக அதிலிருந்து விலகியிருக்கக் கூடிய திரு. இராமனுசம் என்று சொல்லக்கூடியவர் இருக்கிறார். இன்னும் இதுபோன்றவர்களுடைய 'லிஸ்ட்' ஒன்றைக் கொடுக்கவும் நான் தயாராகயிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நடந்த நிகழ்ச்சிக்குக் கனம் உறுப்பினர் அவர்களின் விளக்கம் தேவை இல்லை. காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்ளவில்லை, காங்கிரசிலிருந்து விலகினவர்கள் கலந்துகொண்டார்கள் என்று இப்பொழுது சொல்லுகிறீர்கள். அந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ்காரர்கள் கலந்துகொண்டார்கள் என்று முன்பு தாங்கள் சொன்ன அந்த வார்த்தைகளை மட்டும் திரும்பப் பெற்றுக்கொள்ளுவது நலம்.

(சிறிது நேரத்திற்குப் பிறகு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவில்லையென்றால், அந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கலந்து கொண்டார்கள் என்று கனம் உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியை பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று நான் உத்தரவிட வேண்டியிருக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : காங்கிரஸ்காரர்களாக இருந்திருக்கலாம், பின்பு அதிலிருந்து விலகியவர்களாக இருக்கலாம். அதையெல்லாம் இப்பொழுது குறிப்பிடவேண்டியதில்லை. இப்பொழுது அவர்கள் காங்கிரஸ்காரர்களாக இல்லை, ஆகவே, காங்கிரஸ்காரர்கள் அதில் கலந்துகொள்ளவில்லை என்பது இப்பொழுது ஏற்பட்டிருக்கிற முடிவாகும். கனம் உறுப்பினர் அவர்கள், "காங்கிரஸ்காரர்கள் கலந்துகொண்டார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், அதைப் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி நான் உத்தரவிட வேண்டியிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சில வார்த்தைகளை வாபஸ் பெறவேண்டும் என்று தாங்கள்

1968 ஆகஸ்ட் 16]

உத்தரவிட்டீர்கள். அதற்கு அந்தக் கனம் உறுப்பினர் அவர்கள் கீழ்ப்படிகிறாரா, இல்லையா என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவில்லையென்றால், அந்த வார்த்தைகள் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், நான் அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள், காங்கிரஸ்காரர்களைப் பற்றிக் குறிப்பிட்ட விவாதம் முடிந்தது. ஆனால், வேறு பல கட்சிக்காரர்கள் கலந்துகொண்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது உண்மை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சில இடத்தில் சேர்ந்திருக்கிறார்கள். ரிபப்ளிகன் கட்சியைச் சேர்ந்தவர்கள் சில இடத்தில் சேர்ந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சில இடத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, arising out of the answer given by the Hon. Chief Minister if burning of the Central budget by some political parties or by the members of the public is considered to be inoffensive and if the Government does not launch any criminal action against such people, will the Government give an assurance to us also that in future if your budget is not congenial to our taste, are we also at liberty to burn it and would you not launch any criminal action against us?

THE HON. THIRU C. N. ANNADURAI : I have said that burning of the Central Government budget is not an offence so long as any consequence is not there. If the hon. Member wants to indulge in such activities like the burning of our budget, he is at liberty to do so but he would be advised to keep his match stick just to the paper and not to anything else.

DR. H. V. HANDE : Sir, it is not our habit to burn the budget copies to express our displeasure at the budget. Though we are totally opposed to the increase in the rates of post cards, etc., we did not burn the copies of the budget. Will the Chief Minister tell us whether the budget copies were burnt because those who burnt did not agree with contents of the budget or because copies were printed in Hindi also? May I know whether the Hindi copies were burnt or whether the English copies were burnt?

THE HON. THIRU C. N. ANNADURAI : I presume that only English budget copies were burnt, because I do not think Hindi budget copies were available to them.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, அரசியல் கட்சிகள் மத்திய பட்ஜெட்டைக் கொளுத்தியதாகச் சொல்லப்படுகிறது. மத்திய அரசாங்கத்தினுடைய பட்ஜெட் முழுவதையும் கொளுத்தினார்களா ? அல்லது, அதிலே ஜனங்களைப் பாதிக்கக்கக்கூடிய வரிகள் உள்ள பகுதிகளை, அதாவது கார்டு, கவர், இரயில்வே கட்டணங்கள் இவைகளை உயர்த்திய பகுதிகளை மட்டும் கொளுத்தினார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பட்ஜெட் முழுவதையுமே அவர்கள் கொளுத்தவில்லை. அதிலே பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய வரிகள் எங்கெங்கே இருக்கின்றன என்று கருதினார்களோ அந்தப் பகுதி கொளுத்தப்பட்டது.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, அந்த பட்ஜெட்டின் மூலம், மக்கள் மீது மத்திய சர்க்காரால் விதிக்கிற வரிச் சுமையை எதிர்க்கும் வகையில், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் மக்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் வகையில், செய்யப்பட்ட சாதாரணமான காரியம் அது. அதுபோன்ற காரியம் ஏற்கனவே நடத்தப்பட்டிருக்கிறது. அந்த பட்ஜெட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளை எரிப்பது சட்டப்படி குற்றம் அல்ல என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே, அதைப்பற்றி அதிகப்படியாக இந்தச் சட்டப் பேரவையில் யாரும் அதைப் பிரச்சினையாகக் கிளப்புவதற்கு இடம் இல்லை என்பதை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன கடைசி வாதத்தை ஏற்றுக்கொண்டு, இதைப் பற்றி மேலும் விவாதிக்காமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

I.A.S. Posts

*3 Q.—DR. HABIBULLAH BAIG : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of posts in the I.A.S. Cadre that is normally required for this State; and

(*b*) the total number of posts in the I.A.S. Cadre at present?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :

(அ) ஐ.ஏ.எஸ். தமிழ் நாட்டுப் பிரிவில் 156 அதிகாரிகள் உள்ளனர்.

(இ) மாநில அரசாங்கத்தைக் கலந்து இந்த அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை 184 என்று இந்திய அரசு முடிவு செய்தது. இதன் விவரம் வருமாறு :—

(1) நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டிய பதவிகள்	95
(2) மேலே 1-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள பதவிகளில் 20 சத வீதம் என்ற வகையில் நியமன ஒதுக்கம்	19